

# தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு

## சமூக வாழ்வில் சோதனைகள் உள்ளடக்கம்

### தொடக்கச் செபம்

இரக்கமுள்ள தந்தையே!
உமது பிரசன்னத்தில் மீண்டுமாகக் கூடியுள்ளோம்.
வாழ்வின் துன்ப துயர ஏமாற்றம் நிறைந்த
அனுபவங்களோடு இங்கு வந்துள்ளோம். இதுவே சிலுவை
வாழ்வின் உண்மை நிலை என்பதை உணர்கிறோம்.
வாழ்வின் பளுவைத் தாங்கிக்கொள்ள எங்களுக்கு
வலிமையையும், புரிதலையும் தந்தருளும். உமது
வார்த்தையைக் கேட்க எம் செவிகளையும், படைப்பின்
மகிமையை உணர எம் கண்களையும் திறந்தருளும்.
இவ்வுலகைச் சிறந்த உலகமாக மாற்ற
உமது அருளைத் தாரும். ஆமென்.

## இறைவார்த்தை

### முதலாம் வாசகம்:
### தொடக்க நூல் 12:1-4

கடவுள், ஆபிரகாமுக்கு வாக்களித்த பொருட்செல்வம், குழந்தைச்செல்வம், பிற நாடுகளை ஆளவும், அவைகளுக்கும் கடவுளுக்கும் இடையே ஒரு கருவியாகவும் இருந்து, இறையாசீரைப் பெற அழைத்த வாழ்வு, சவால்கள் பல நிறைந்ததாகவும் இருந்தது. ஆபிரகாம் தன் தந்தை இருந்த இருப்பிடத்தை விட்டு விலகி, கடவுள் வாக்களித்த நாட்டுக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆபத்துக்கள் நிறைந்த காடுகள் வழியாகப் பயணம் செய்வது எவ்வளவு கடினம் என்று அறிந்திருந்தும் அவரது ஆசீரைப் பெறவும், அழைப்பை ஏற்கவும் ஆபிரகாம் கீழ்ப்படிந்து கடின பாதையை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

### இரண்டாம் வாசகம்:
### 2 திமொத்தி 1:8-10

மனிதனின் வலிமை அதன் எல்லை வரை சோதிக்கப்படுவதுண்டு. தூய பவுல் தன் சீடரான திமொத்திக்கு எழுதும் போது, நற்செய்தியை அறிவிக்கும் போது ஏற்படும் சவால்களை எழுத மறக்கவில்லை. துன்பங்கள் கிறிஸ்தவ வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்று. அதனால் கடவுளின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஆழமானதாகவும் அசைக்க முடியாததாகவும் இருக்க வேண்டும்.

### நற்செய்தி:
### மத்தேயு 17:1-9

எருசலேமில் காட்டிக்கொடுத்தல், மறுதலித்தல், சிலுவைச்சாவு இவை காத்திருக்கிறது என்று இயேசு அறிந்திருந்தும் அங்கே செல்கிறார். இறையாட்சி இம்மண்ணில் மலர, தன் தந்தையின் திருவுளத்திற்குப் பணிய வேண்டும் என்று, பழைய ஏற்பாட்டில் மாபெறும் இறைவாக்கினரான மோசே எலிசா இவர்களை விட மேலான இயேசு அறிந்திருந்தார். கடவுளாகிய தந்தை, இயேசுவுக்கு தனது ஒப்புதலை அளித்திருந்தார். “இதோ என் அன்பார்ந்த மகன். இவருக்கு செவிசாயுங்கள்.”

# தவக்காலம் இரண்டாம்ஞாயிறு.

திருவழிப்பாட்டு ஆண்டு A (16-03-2014)

www.tamilcatholicnews.com

## திருப்பலி முன்னுரை:

இயேசுக் கிறிஸ்துவின் பாஸ்காவிழாவிற்கு அணியமாகும் வகையில் தவக்காலப் பக்தி முயற்சிகளில் பங்கேற்று இன்று சிறப்பாக **தவக்காலம் இரண்டாம் ஞாயிறு** திருப்பலி வழிபாட்டில் பங்கேற்றுக் கொண்டிருக்கும் பெரியோர்களே! வருங்காலத் திரு அவையின் கருவாகிய இளையோர்களே! சிறுவர் சிறுமிகளே உங்கள் அனைவருக்கும் தவக்காலம் தரும் புதிய பாஸ்காப் பெருவாழ்வு கிடைக்க அன்புடன் வாழ்த்துகிறேன்.

தாயின் வயிற்றிலேயே அழைக்கப்பட்டு கடவுளின் மக்களான பெற்றோருக்குப் பிறந்த மக்களாய்ப் புதிய வாழ்வைத் தொடங்கினோம். மனிதனுக்குள் இறைவனின் மாட்சிமை பொதிந்திருக்கின்றது. உலகில் பல நெருக்கடியான சூழ்நிலைகளிலும், பணிகளிலும் நாம் இந்த மேன்மையை உணர்வதில்லை. இறைமகன் இயேசு தமது மாட்சிமையை உருமாற்றத்தின்பொது வெளிப்படுத்துகின்றார். நம்மில் தீமைகள் அழிந்தால் மாட்சிமை வெளிப்படும். இயேசுவுடன் இணைந்திடுவோம், தீமைகளை அழித்திடுவோம், இறைவனின் மாட்சிமை நம்மில் துலங்கிடச் செய்திடுவோம். வரம் கேட்டுத் தொடரும் திருப்பலியில் பங்கேற்போம்.

## முதல் வாசகம்

**உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்**

தொடக்க நூலிலிருந்து வாசகம் 12: 1-4

அந்நாள்களில் ஆண்டவர் ஆபிராமை நோக்கி, `உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன் உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன் நீயே ஆசியாக விளங்குவாய். உனக்கு ஆசி கூறுவோர்க்கு நான் ஆசி வழங்குவேன் உன்னைச் சபிப்போரை நானும் சபிப்பேன் உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்" என்றார். ஆண்டவர் ஆபிராமுக்குக் கூறியபடியே அவர் புறப்பட்டுச் சென்றார்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.

- இறைவா உமக்கு நன்றி

## பதிலுரைப் பாடல்

பல்லவி: ஆண்டவரே, உமது பேரன்பு எங்கள்மீது இருப்பதாக!

திருப்பாடல் 33: 4-5. 18-19. 20,22

ஆண்டவரின் வாக்கு நேர்மையானது அவருடைய செயல்கள் எல்லாம் நம்பிக்கைக்கு உரியவை. அவர் நீதியையும் நேர்மையையும் விரும்புகின்றார் அவரது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது. **-பல்லவி**

தமக்கு அஞ்சி நடப்போரையும் தம் பேரன்புக்காகக் காத்திருப்போரையும் ஆண்டவர் கண்ணோக்குகின்றார். அவர்கள் உயிரைச் சாவினின்று காக்கின்றார் அவர்களைப் பஞ்சத்திலும் வாழ்விக்கின்றார். **-பல்லவி**

நாம் ஆண்டவரை நம்பியிருக்கின்றோம் அவரே நமக்குத் துணையும் கேடயமும் ஆவார். உம்மையே நாங்கள் நம்பியிருப்பதால், உமது பேரன்பு எங்கள்மீது இருப்பதாக! **-பல்லவி**

## இரண்டாம் வாசகம்:

அவர் சாவை அழித்து, அழியா வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார்.

திருத்தூதர் பவுல் திமொத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 1: 8b-10

அன்பிற்குரியவரே, கடவுளின் வல்லமைக்கேற்ப நற்செய்தியின் பொருட்டுத் துன்பத்தில் என்னுடன் பங்குகொள். அவர் நம் செயல்களை முன்னிட்டு அல்ல, காலங்களுக்கு முந்திய தமது தீர்மானத்தின்படி, கிறிஸ்து இயேசு வழியாக நமக்கு அளிக்கப்பட்ட அருளின்படி நம்மை மீட்டுள்ளார் நமக்குத் தூய அழைப்பு விடுத்துள்ளார். நம் மீட்பராகிய கிறிஸ்து இயேசு உலகில் தோன்றியதன் மூலம் இப்போது அருள் வெளிப்பட்டுள்ளது. அவர் சாவை அழித்து, அழியா வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார்.

**- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு**

**- இறைவா உமக்கு நன்றி**

## நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

அல்லேலூயா, அல்லேலூயா! ஒளிரும் மேகத்திலிருந்து தந்தையின் குரலொலி கேட்டது: `என் அன்பார்ந்த மைந்தர் இவரே் இவருக்குச் செவிசாயுங்கள்." அல்லேலூயா

## நற்செய்தி வாசகம்

**மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 17: 1-9**

அக்காலத்தில் இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவர் சகோதரரான யோவானையும் ஓர் உயர்ந்த மலைக்குத் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள் முன் அவர் தோற்றம் மாறினார். அவரது முகம் கதிரவனைப் போல் ஒளிர்ந்தது. அவருடைய ஆடைகள் ஒளி போன்று வெண்மையாயின. இதோ! மோசேயும் எலியாவும் அவர்களுக்கு முன் தோன்றி இயேசுவோடு உரையாடிக்கொண்டிந்தனர். பேதுரு இயேசுவைப் பார்த்து, `ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைக்கட்டுமா? இது உமக்கு விருப்பமா?" என்றார். அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது ஒளிமயமான மேகம் ஒன்று அவர்கள்மேல் நிழலிட்டது. அந்த மேகத்திலிருந்து, `என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இவருக்குச் செவிசாயுங்கள்" என்று ஒரு குரல் ஒலித்தது. அதைக் கேட்டதும் சீடர்கள் மிகவும் அஞ்சி முகங்குப்புற விழுந்தார்கள். இயேசு அவர்களிடம் வந்து அவர்களைத் தொட்டு, `எழுந்திருங்கள், அஞ்சாதீர்கள்" என்றார். அவர்கள் நிமிர்ந்து பார்த்தபோது இயேசு ஒருவரைத் தவிர வேறு எவரையும் காணவில்லை. அவர்கள் மலையிலிருந்து இறங்கி வந்தபோது இயேசு, `மானிடமகன் இறந்து உயிருடன் எழுப்பப்படும்வரை இக்காட்சியைப்பற்றி எவருக்கும் சொல்லக்கூடாது" என அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

**- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**

**- கிறிஸ்துவே உமக்கு புகழ்.**

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**அன்புத் தந்தையே இறைவா!**

உமது திருச்சபைக்கு நீர் அளித்திருக்கின்ற இந்தத் தவக்காலத்திற்காக உம்மை நன்றியுடன் புகழ்கின்றோம். திருச்சபையின் விண்ணகம் நோக்கிய திருப்பயணத்தில் எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவு நிலையினர் அனைவரும் தங்களின் சொல்லிலும் செயலிலும் உமது புனிதத்தைப் பிரதிபலித்து வாழ்ந்திடவும், அனைவருக்கும் மேன்மையான வழிகாட்டுதல் தந்திடவும் அருள்தருள வேண்டுமென்று தயவாய் உம்மை மன்றாடுகின்றோம்.

**நான் உன்னை மறக்கவே மாட்டேன் என்ற தந்தையே!**

உம் திருமகனின் குரலுக்கு நாங்கள் செவிசாய்த்து, அவரது வழியில் நடந்திடவும், குடிப்பழக்கம், போதைப்பொருள் நுகர்வு, சிற்றின்ப நாட்டங்கள் இவை மனித மாண்பைச் சிதைக்கின்றன என்பதை உணர்ந்து இளைஞர்கள் நற்செய்தியின் வழி வாழ்ந்து மாண்புற வேண்டுமென்று தயவாய் உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

நீர் எமக்குக் கொடுத்துள்ள மக்கள் செல்வங்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். அவர்கள் இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பின் நாள் என்னும் இறைவெளிப்பாட்டை தம் உள்ளத்தில் ஆழமாகப் பதித்து: இக்காலத்தை உம்மையே தேடி நேசிப்பதிலும், உமது வார்த்தைக்கு ஆர்வத்துடன் செவிமடுத்து வாழுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தவும் உமக்குகந்த பிள்ளைகளாக வாழவும், செயற்படவும் அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று தயவாய் உம்மை மன்றாடுகின்றோம்.

**விடுதலையின் தெய்வமே இறைவா!**

உம்முடைய அன்பிலிருந்து எம்மைப் பிரிக்க முயற்சிக்கும் மனிதர்கள், பொருட்கள், ஆசைகள், சந்தர்ப்பங்கள் போன்ற கொடிய சோதனைகளிலிருந்து நாங்கள் விடுதலை பெற்று உமக்கும், உமது வார்த்தைக்கும் மாத்திரமே செவிசாய்த்து, உண்மையான விசுவாச வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய அருளை எமக்குத் தந்தருள வேண்டுமென்று தயவாய் உம்மை மன்றாடுகின்றோம்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா!**

இத்தவ நாட்களிலே எமக்கு நீர் தந்திருக்கும் உமது செய்தியையும், விருப்பத்தையும், சித்தத்தையும், வழிகாட்டுதல்களையும் நாம் சரியான விதத்திலே புரிந்துகொண்டு உம்மோடும், எம் உறவுகளோடும் ஒப்புரவாகி, பகைமைகளை விட்டுவிட்டு மனமாற்றமடைந்து உமது விருப்பப்படி நடக்க வேண்டிய ஞானத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று தயவாய் உம்மை மன்றாடுகின்றோம்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா!**

தொலைத் தொடர்பு ஊடகங்கள், தவறான விளம்பரங்கள், பண்பாட்டுச் சிதைவுகள் இவற்றின் மத்தியில் எங்கள் இளைஞர்கள், இளம் பெண்கள் பாவச் சோதனைகளுக்கு உடன்படாமல் உமது வார்த்தையின் வழிநடந்து வெற்றி வாழ்வைக் கண்டிட அருள்புரிய வேண்டுமென்று தயவாய் உம்மை மன்றாடுகின்றோம்.

## இன்றைய சிந்தனை:

“ஆறு நாள்களுக்குப் பின்பு இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவர் சகோதரரான யோவானையும் ஓர் உயர்ந்த மலைக்குத் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவரது முகம் கதிரவனைப் போல் ஒளிர்ந்தது“ (மத்தேயு 17:1-2)

இயேசு தோற்றம் மாறிய நிகழ்ச்சியை மாற்கு, மத்தேயு, லூக்கா ஆகிய மூவரும் விவரிக்கின்றனர். இந்நிகழ்ச்சியை விவரிப்பதில் பழைய ஏற்பாட்டு உருவகங்கள் பல பயன்படுத்தப்பட்டுள்ளன. மலை, கதிரவனைப்போல் ஒளிரும் முகம், ஒளிமயமான மேகம், மேகத்திலிருந்து வரும் குரல், மோசேயும் எலியாவும் தோன்றுதல் போன்ற உருவகங்கள் ஆழ்ந்த பொருளை உணர்த்துகின்றன. அதாவது மோசே சீனாய் மலையில் ஏறிய போது கடவுள் அவரோடு பேசிய நிகழ்ச்சியின் எதிரொலிப்பு இங்கே உள்ளது. மேகம் என்பது கடவுளின் உடனிருப்பைக் குறிக்கும் அடையாளம். மோசே திருச்சட்டத்தையும் எலியா இறைவாக்கையும் குறிக்கின்றார்கள். இயேசு “திருச்சட்டத்தையும் இறைவாக்குகளையும் அழிக்கவல்ல, அவற்றை நிறைவேற்றவே வந்தார்“ என்னும் செய்தியை மத்தேயு ஏற்கெனவே அறிவித்தார் (காண்க: மத் 5:17). வானிலிருந்து வந்த குரல் இயேசுவைக் கடவுளின் மகன் என அடையாளம் காட்டுகிறது (மத் 17:6). இயேசு வானகத் தந்தையின் “அன்பார்ந்த மகன்“. நாம் அவருக்குச் செவிசாய்க்க வேண்டும் (மத் 17:6).

இயேசுவின் தோற்றம் மாறியதையும் வானிலிருந்து குரல் எழுந்து இயேசுவைக் கடவுளின் மகன் என அடையாளம் காட்டியதையும் கண்டு, கேட்டு அனுபவித்த சீடர்கள் அதன் விளைவாக முகங்குப்புற விழுகிறார்கள். அவர்களை அச்சம் மேற்கொள்கிறது. அப்போது “இயேசு அவர்களிடம் வந்து, அவர்களைத் தொட்டு, “எழுந்திருங்கள், அஞ்சாதீர்கள்“ என்றார்““ (மத் 17:7). கடவுள் நம்மைத் தம்மிடம் ஈர்க்கின்ற சக்தி கொண்டவர் நம் உள்ளம் அவரை நாடித் தேடுகிறது. அதே நேரத்தில் கடவுளின் பிரசன்னத்தில் நாம் அஞ்சி நடுங்குகிறோம். ஆனால் இயேசு நாம் அஞ்சவேண்டியதில்லை என நமக்கு உறுதியளிக்கிறார். அவரோடு நாம் இருக்கும்போது நம் வாழ்வில் அச்சம் நீங்கும் நம் உள்ளத்தில் உறுதி பிறக்கும்.

மன்றாட்டு:

இறைவா, உம் திருமகனின் குரலுக்கு நாங்கள் செவிமடுத்து, அவர் காட்டும் வழியில் நடக்க அருள்தாரும்.

## தியானிப்போம்

மனிதனாகப் பிறந்த இயேசுவிற்கு துன்பங்களும் உடன்பிறப்பாயிற்று. மாறாக, கடவுள் மெசியாவுக்கு அளித்த இறையாட்சியில் துன்பங்களுக்கு முக்கியப் பங்கு இருந்தது. இயேசு தான் சிலுவைச் சாவை ஏற்று, மரித்து, மூன்றாம் நாள் உயிர்க்க வேண்டும் என்பதைக் கேட்ட சீடர்கள் திகிலடைந்தனர். இதன் பொருள் என்னவென்று புரியாததால் தாங்கள் புரிந்து கொண்ட வார்த்தையான இயேசு மரிப்பார் என்பதை நினைத்து சோகம் அவர்களை ஆட்கொண்டது.

இயேசுவின் மண்ணுலக வாழ்விற்குப் பின் நடப்பதைப் பேதுரு, யாக்கோப்பு மற்றும் யோவான் இவர்களுக்கு இயேசு தபோர் மலை நிகழ்வில் பின்னர் எடுத்துக்காட்டுகிறார். இயேசுவின் பாடுகளைப் பற்றிப் புரிந்து கொள்ள, இது உதவியாக இருந்தது. தபோர் மலை நிகழ்வில் தாங்கள் பார்த்த இயேசு, இறையாட்சி பற்றிப் போதிக்கும் அதே இயேசுவா என்று பல ஐயங்கள் அவர்கள் மனதில் உதித்திருக்கும். இயேசு உண்மையாகவே இந்த ஒளி மயமான இயேசுவாக இருந்தால் இந்தத் துன்பங்களை தவிர்த்திருக்கலாம் என்றும் எண்ணியிருக்கலாம்.

நமது வாழ்வில் இப்படியொரு அனுபவம் பெற வாய்ப்பு கிடைத்திருக்கிறதா என்று நினைத்துப் பார்க்கவும். இதில் நாம் சந்தித்தத் துன்பங்களிலிருந்து விடுதலை பெற நினைத்தது உண்டா? புதிய மோசேயான இயேசு கடவுளுக்குப் பணிந்த விசுவாச வாழ்வு வாழ்ந்தாலும், துன்பங்கள் வாழ்வில் நம்மைச் சூழும் என்கிறார். நற்செய்திக்காக நாம் துன்பங்களை அனுபவித்து அதற்கு சான்று பகரவேண்டும்.

## சிந்திப்போம்

### அன்பியங்களுக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றிப் குழுவினரோடு பகிர்ந்து கொள்வோம்.

தவக்காலம் மனமாற்றத்தின் காலம். நமது கூட்டு வாழ்விலுள்ள உடைந்த உறவுகள் பற்றிச் சிந்திப்போம். துன்பங்களையும், உரசுகின்ற உறவுகளையும் நாம் தவிர்க்கிறோமா? மனமாற்றத்திற்குத் தடைகள் இருக்கின்றதா? இந்தத் தவக்காலத்தில் எனது சமூக வாழ்வு எதை விட்டுக் கொடுக்க அழைக்கிறது?

### ஆலயப் பணிக்குழுக்களுக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றிப் குழுவினரோடு பகிர்ந்து கொள்வோம்.

புதிய வாழ்விற்கு உயிர்த்தெழத் தவக்காலம் நம்மை முழு மனமாற்றத்திற்கு அழைக்கிறது. நாம் விசுவாசமுள்ளவர்கள் என்று பிறருக்கு அறிவிக்க, ஆலயப்பணியாளரான என்னில் என்னென்ன மாற்றம் தேவை. இத்தவக்காலத்தில் புது வாழ்வு வாழ ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து, புனித வாழ்வு வாழ தியானிப்போம்.

### குடும்பத்தினருக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றிப் குடும்பத்தினரோடு பகிர்ந்து கொள்வோம்.

நம் வாழ்வின் தீய பழக்கங்களிலிருந்து மாறக் குடும்பம் எதிர்கொள்ளும் சவால்கள் என்னென்ன? புனித வாழ்வு வாழக் குடும்பத்தில் நீ எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் ஒரு பகுதியைப் பற்றிப் பேசவும். குடும்பமாக எவ்வாறு புனித வாழ்வுக்கு மாறலாம் எனப்பேசி செபிக்கவும்.

விவாதித்தப் பின், மனமாற்றமடைய தைரியமும் விடாமுயற்சியும் பெறச் செபம் ஒன்றைத் தயார் செய்து குடும்பத்தாரில் ஒருவரைச் செபிக்கச் செல்லவும். குடும்ப வாழ்வின் சவால்களை எதிர்த்துப் போராடத் தேவையான வல்லமையைத் தர வேண்டுமென்று இறைவனிடம் மன்றாடுவோம்.

### தனிநபருக்காக:

நீ வாசித்த இறைவார்த்தைகளில் உன் மனதைத் தொட்டவைகளைப் பற்றிச் சற்று நேரம் சிந்தித்துப் பார். இந்த இறைவார்த்தைகளைப் வேறு ஒருவருடன் பகிர விரும்பினால் எதைப் பகிர்ந்து கொள்வாய்?

துன்பங்களைக் கண்டதும் எதிர்க்கொள்வோம் அல்லது தப்பியோடுவோம் என்ற உள்ளணர்வு நம்மில் உதயமாகும். இச்சவால்களைச் சமாளித்து இறைவனின் பிள்ளைகளாக வளர எனக்கு என்னென்ன உதவிகள் தேவைப்படுகிறது?

உயிர்ப்பு விழாவின் உண்மைப் பொருளைப் புரிந்து கொண்டு, பரலோகத் தந்தையின் அன்பைப் பருக நீ எந்த நபரைத் தேர்வு செய்து, அவரோடு தவக்காலத்தில் பயணம் செய்யலாம் எனச் சிந்திக்கவும்.

## நம் வாழ்விற்காக

எதையும் பார்த்துச் செயல்படும் படைப்புகளாகிய நாம், நல்லது கெட்டது எதுவென அறிந்து கொள்வது இயல்பான பழக்கமாக உள்ளது. புதிய வாழ்வு வாழத் துன்பங்களை எதிர்க்கொள்ளக் கற்றுக் கொள்ள வேண்டும். இயேசுவின் உருமாற்ற நிகழ்வில் பரலோகத் தந்தை இயேசுவில் பிரசன்னமாயிருக்கிறார். நாம் மனமாற்றத்தின் சிலுவையைத் தாங்கும் போது, கடவுளின் அருளால் நமது துன்பச் சிலுவையை ஏற்று வாழ நமக்கு வல்லமை கிடைக்கும்.

இறையாட்சியாகிய நம் இலக்கை அடையும் போது நம் வாழ்வின் அனுபவத்தில் நாம் மேற்கொண்டத் துன்பங்கள் மகிழ்ச்சியாகத் தோன்றும்.

## நற்செயல் புரிவோம்

### ஆலயப் பணிக்குழுக்கள்:

இத்தவக்காலத்தில், ஒருவரது வழி மாற்றமடைவதால் ஏற்படும் துன்பங்களைப் பற்றி அதே நபரிடம் கலந்துரையாடவும்.

### குடும்பத்தினர்:

உன் குடும்பத்தில் என்ன மனமாற்றத்தை நீ காண விரும்புகிறாய் என்பதை உன் உறவினருடன் பகிரவும்.

### தனிநபர்:

உன் வாழ்வில் நீ எந்த விதமான மனமாற்றம் பெற விரும்புகிறாய் என்று எழுதவும்.

## நிறைவு செபம்

குழுவாகத் திருச்சிலுவையின் முன் அமைதியில் தியானித்து, இயேசு கற்பித்த செபத்தைச் சொல்லி நிறைவு செய்யவும்.